

12–வது பதினெண் சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்

காணிக்கை ரூ. 525 தொலைபேசி : 654447

இ.மு.க. I.M.K.

# இந்து முன்னேற்ற கழகம்



மெய்ஞ்ஞானக்கொடி

# கோயில் ஒழுங்கு

பதினெண் சித்தர் மடம் வெளியீடு

# இ.ம.இ; இ.மு.க

முழுக்க முழுக்க இந்துவேதத்தைக் கற்கவும், இந்துமதத்தின் கலைகளைப் பயிலவும், அருட்பணி ஆற்றவும் மக்களைத் தயாரிக்க இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ. – I.M.I.) பாடுபடுகிறது.

இந்துவேதவழி இந்துவேத வாழ்வியல் நடைமுறைகளைச் செம்மைப்படுத்திச் சமுதாய மறுமலர்ச்சியையும், அருளாட்சியையும் அமைத்திட இந்து முன்னேற்ற கழகம் (இ.மு.க. – I.M.K.) பாடுபடுகிறது.

இவற்றில் உறுப்பினராகவும், ஆங்காங்கே கிளைகள் அமைக்கவும் தொடர்பு கொள்க.


3, N.G.O. நகர்
பொன்னேரி–601 204.

ஞானச்சாரியார்,
வரதராசபுரம்,
அம்பத்தூர்,
சென்னை–53.
தொலைபேசி : 654 447



உரிமை வெளியீடு : பதினெண் சித்தர் மடம்
கீரரணைடை, சென்னை – 67.
வெளியீடு எண் :
முதல் பதிப்பு : பிப்ரவரி, 1990
இரண்டாம் பதிப்பு : சூலை, 1992




இந்து மதத் தந்தை, அருளாட்சி நாயகம்,
ஞானச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு,
சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்,
பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி.
கி.பி. 785-1040.

# கோயில் ஒழுங்கு

## தமிழரின் சிந்தனையைத் தேடி?!
### (முயற்சி – ஒன்று)

### அணிந்துரை

இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர் மடம், இந்து மதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண் சித்தர் பீடம்; இந்து மதத்தின் முழு முதல் தலைமை ஆச்சாரியார், இந்து வேதநாயகம், இந்து மதத்தந்தை, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், இந்து வேத பாடசாலை, இந்து முன்னேற்ற கழகம், அம்பத்தூர், சென்னை 53.

### நூல் அறிமுகவுரை

(1) 'கோயில் ஒழுங்கு' என்ற தலைப்பில் இச் சிறு நூல் வெளியிடப்படுவதற்குக் காரணம் கோயில்கள் நிறைந்த நம் நாட்டில் கோயில்களைப்பற்றிய அறிவும் அக்கரையும், ஆர்வமும், ஆராய்ச்சியும் மிகவும்

குறைந்து போய்விட்டன; குறைந்து போயிருக்கின்றன என்ற நிலையை மாற்றுவதற்காகத்தான்.

(2) "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற கருத்தை உடைய நம் தாயக மக்களிடையில்; கோயில்களைப் புறக்கணிக்கும் போக்கும்; கோயில்களை மறக்கும் போக்கும்; கோயில்களை மறுத்து வெறுத்து எதிர்க்கும் போக்கும்; . . . எப்படியோ தோன்றிவிட்டன. எனவேதான், பதினெண் சித்தர் மடம் கோயில்களைப் பற்றிய அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் சிறிய பெரிய புத்தகங்களையும் தொடர்ந்து வெளியிடும் பணியை மேற்கொண்டிருக்கிறது. இப்பணிக்குத் தேவையான அளவு போதிய வசதி வாய்ப்புகள் பெருக வேண்டும் என்பதற்காகவே பதினெண் சித்தர் மடம் எல்லோருடைய உதவிகளையும் ஆதரவுகளையும் பெறுவதற்காக இந்த புத்தகத்தை வெளியிடுகிறது.

(3) பதினெண் சித்தர்கள் அண்ட பேரண்டங்களில் இருந்து இம்மண்ணுலகிற்கு அடிக்கடி வந்து சென்றதன் பயனாகவே இம்மண்ணுலகின் அனைத்து வகைப்பட்ட பயிரினங்களையும் உயிரினங்களையும் காப்பாற்றுவதற்கு உரிய உலகப்பொது வேதமான இந்து வேதம் இம்மண்ணுலகுக்குக் கிடைத்தது. மேலும், பதினெண் சித்தர்கள் தங்களுடைய அருளாட்சிக்கு உட்பட்ட 48 வகைப்பட்ட கடவுள்களும், 48 வகைப்பட்ட வழிபடு நிலையினர்களும், 48 வகைப்பட்ட சித்தர்களும், 48 வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களும் 'இந்து வேதத்தை, இந்து மதம் என்னும் வாழ்வியல் நடைமுறையாக ஆக்கிக் கொடுத்தார்கள்.' அப்படி அவர்கள் உருவாக்கிக் கொடுத்த இந்து மதத்தின் செயலகங்களாகவும், அலுவலகங்களாகவும், பல்கலைக் கழகங்களாகவும் உருவாக்கப்பட்டவைதான் 'கோயில்கள்'.

(4) எனவே தான் இந்து வேதம் கோயில்களின் வகைகள் பற்றியும், கோயில்கள் கட்டும் விஞ்ஞானங்கள் பற்றியும், கோயில் ஊழியக்காரர்கள், ஊழியர்கள் பற்றியும், கோயில்களின் உயிர்ப்பு, புத்துயிர்ப்பு பற்றியும் ... மிகமிக விரிவாக விளக்குகிறது; பேசுகின்றது.

(5) இந்து வேதம், "இம்மண்ணுலகில் உள்ள அனைத்து மூலக்கோயில்களும் பதினெண் சித்தர்களால் தான் கட்டப்பட்டன" என்று கூறி; " இம்மண்ணுலகில் தோன்றக்கூடிய அனைத்து அருளாளர்களும் பயன் படுத்துவதற்காகவே இம்மண்ணுலகம் முழுவதும் உள்ள அருளூற்றுக்களை எல்லாம் ஆராய்ந்து! ஆராய்ந்து!! தேடி! தேடி!!; கண்டுபிடித்து! கண்டுபிடித்து!!; அவற்றைப் போற்றிப் பேணிப் பாதுகாக்கும் வண்ணம் ஆங்காங்கே ஒவ்வொரு அருளூற்று இருக்கும் இடங்களிலும் கோயில்களைக் கட்டினார்கள், பதினெண் சித்தர்கள்" என்று கூறுகிறது இந்துவேதம்.

(6) இப்படி இந்து வேதம், இந்த உலகம் முழுவதும் உள்ள கோயில்களையெல்லாம் பதினெண் சித்தர்கள் தான் கட்டினார்கள் என்று கூறுவதால் தான்; "இம்மண்ணுலகில் தோன்றக்கூடிய எல்லா மதங்களும் இந்து வேத மதமான இந்து மதத்தின் கிளையாகவோ, இலையாகவோ, பூவாகவோ, காயாகவோ, கனியாகவோ தான் இருக்கமுடியும், இருக்கமுடியும், இருக்கமுடியும்" என்று இந்து வேதம் உரிமை பாராட்டுகிறது."

(7) இந்து வேதம் 'கோயில் ஒழுங்கு' என்ற தலைப்பில் தான்; இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு உதவுகின்ற 1, குரு, 2. குருக்கல்,3. குருமார் 4. பூசாறி எனும் நால்வர்களின் ஒழுங்குகளையும், (ஒழுகலாறுகளையும்); கோயில் கருவறை முன் மண்டபத்தில் பணியாற்றும், 1. ஆதகர், 2. ஈதகர், 3. ஊதகர், 4. ஏதகர், 5. ஓதகர், எனும் ஐவர் ஒழுங்குகளையும் (ஒழுகலாறுகளையும்); கோயிலில் தங்கிக் கொண்டு இந்து வேதத்திற்காகவும், இந்து மதத்திற் காகவும், நாடெங்கும் சென்று பாடுபடக்கூடிய 1. கோதகர், 2. சாதகர், 3. சோதகர், 4. தோதகர், 5. போதகர், 6. நாதகர், 7. நோதகர், 8. வாதகர், 9. வேதகர் எனும் ஒன்பது பேர்களின் ஒழுங்குகளையும் (ஒழுகலாறுகளையும்) விளக்கிக் கூறுகிறது. இப்படி கோயிலைச் சார்ந்துதான் இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் உரிய நான்கு வகைப்பட்ட கலைஞர்களும் விளக்கப்படுகிறார்கள்.

(8) இவற்றால் தான், 'கோயில் ஒழுங்கு' என்ற தலைப்பில் இந்து வேதம் பற்றிய பேருண்மைகளும், இந்து மதம் பற்றிய பேருண்மைகளும் மிகப்பெரிய நூல்களாக பல தொகுதிகளில் எழுதப்பட்டுள்ளன. இவையெல்லாம் அச்சேறி வெளிவர வேண்டும். இதற்காக அனைவரின் ஆதரவுகளும், உதவிகளும், ஏந்துகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

(9) கோயில்களில் பொதுவாக மொழி, இனம், மதம், நாடு.... என்ற வேறுபாடுகளையெல்லாம் கடந்து யாராக இருந்தாலும் இங்கு பட்டியலிட்டு காட்டப்படுகின்ற 1. காற்று 2. கருப்பு 3. பேய் 4. பிசாசு 5. பில்லி 6. சூன்யம் 7. ஏவல் 8. செய்வினை 9. வைப்பு 10. கழிப்பு 11. மருந்து 12. கண்ணேறு ஆகிய பன்னிரண்டு பாதிப்புக்களுக்கும் உரிய தெய்வீக மருத்துவம் செய்யப்படுவது பற்றிய குறிப்புக்கள் இந்து வேதத்திற்குரிய (396) முந்நூற்று தொண்ணூற்றாறு நூல்களிலும், இந்து மதத்திற்குரிய (36) முப்பத்தாறு நூல்களிலும் மிகத் தெளிவாக விளக்கப்படுகின்றன.

(10) இதைப் போலவே 'கோயில் ஒழுங்கு' என்ற தலைப்பில் ஒவ்வொருவரும் 1. பிறந்த நேரத்தைக் குறித்து அருட்கணிப்புச் செய்யும் பிறப்பியல் (சாதகம்) 2. கைரேகையைக் கொண்டு அருட்கணிப்புச் செய்யும்

வரியியல், 3. உடல் உறுப்புக்களின் அமைப்புக்களைக் கொண்டு கணிக்கும் அங்கவியல், 4. ஒவ்வொருவரின் பெயரைக் கொண்டு கணிக்கும் பெயரியல், 5. ஒவ்வொருவர் வாழும் இடத்தைக் கொண்டு அருட்கணிப்பு கணிக்கும் மனையியல் எனும் ஐந்து வகைப்பட்ட கணிப்புக் கலைகள் 'கோயில் ஒழுங்கு' என்ற தலைப்பின் கீழ் தான் இந்து வேத நூல்களிலும், இந்து மத நூல்களிலும் குறிக்கப்படுகின்றன. எனவே இந்தக் 'கோயில் ஒழுங்கு' என்ற தலைப்பில் பல நூல்கள் வெளிவர அனைவரும் உதவ வேண்டும்.

**அந்தணர் அண்ணல்,**
**ஞானச்சாரியார்.**



# அறிமுகவுரை





11–வது பதினெண் சித்தர் பீடாதிபதி    12–வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ஞானச்சாரியார், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு, சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள், அருளாட்சி நாயகமாகச் செயல் பட்டு; மதவழி அரசியல் புரட்சி செய்து, 'இந்துமத அருட் பேரரசாகப் பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கினர். அப்பேரரசின் மன்னர் மன்னர்கள், அரசர்கள், வேளிர்கள், பெருநிலக் கிழார்களான வேளார்கள், அமைச்சர்கள், தளபதிகள், தானைதிகாரிகள், முதலிய அரசியல்வாதிகளால் 'இந்துமத மறுமலர்ச்சி', 'அருட்பணி விரிவாக்கம்', 'தமிழின மொழிமத விடுதலை'... முதலிய பணிகள் சிறப்படையவில்லை, வளவளர்ச்சி பெறவில்லை, ஆட்சி மாட்சி பெறவில்லை.

இவற்றை எண்ணி வருந்திய இவர்; தமக்குமுன் வாழ்ந்த பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குரு மகா சன்னிதானம், ஞாலகுரு, சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் அவர்கள், தாம் காத்து வளர்த்திட்ட இந்துமத அருட்பேரரசான பாண்டியப் பேரரசு; தமது அறிவுரைகளைக் கேட்காமல் செயல்பட்டு மாபெரும் அழிவை அடைந்த பிறகு; தம்மைத் தத்துவ நாயகமாகச் செயல்படுத்தித் தமிழர்களுக்கு வழங்கிய ஏட்டறிவையும், பட்டறிவையும் 'குறிப்பேடு' என்ற பெயரில் சிறுசிறு கட்டுரைகளாக எழுதி நாட்டிலுள்ள கோயில்களனைத்திலும் மக்களுக்குப் படித்துக்காட்டும் படி செய்தார். அவற்றுள் ஒன்றே இந்தக் 'கோயில் ஒழுங்கு'.

பதினெண் சித்தர் மடம், பீடம், கருகுலம்,<br>
இந்து மறுமலர்ச்சி இயக்கம்<br>
அருட்பணி விரிவாக்கத்திட்டம்<br>
தமிழின மொழி மத விடுதலை இயக்கம்.<br>
இந்து முன்னேற்ற கழகம்.

# கோயில் ஒழுங்கு

எப்படியோ, நம் தமிழர்கள் விடாப்பிடியாகக் கோயில் வழிபாடு, திருவிழா, திருநாள் ... முதலியவை களைக் கொண்டாடி வருகிறார்கள். ஆனால், அரசன் முதல் ஆண்டி வரை ... யாருமே தங்களுடைய மதம் என்ன? மதத்தலைவர் யார்? மதநூல்கள் என்னென்ன? மதப்போதனைகள் யாவை? மதச்சாதனைகள் என்னென்ன? தங்களுடைய கோயில்களின் வரலாறு என்ன? தாங்கள் வாழும் மதவாழ்வில் உள்ள வழிபாடு, திருவிழா, திருநாள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் ... முதலியவை பற்றிய விளக்கங்கள், நோக்கங்கள் என்னென்ன? ... என்பவை பற்றி எண்ணிப் பார்ப்பதே இல்லை; கவலைப்படுவதே இல்லை.

இவற்றால்தான், நம் தமிழர்களின் வாழ்வில் ஆன்மீக உணர்வு பெருமளவில் குன்றிக் குறைந்து மறைந்திருக்கின்றது. அதனால், தனி மனித வாழ்வில் தன்னம்பிக்கை, துணிவு, ஆர்வம் முதலியவை குறைந்தும்; குடும்ப வாழ்வு , சமுதாயவாழ்வு, அரசியல் வாழ்வு... முதலியவற்றில் பற்று, பாசம், ஒற்றுமை, உறவு, நட்பு முதலியவையெல்லாம் பெருமளவில் உருக்குலைந்து உயிரடங்கிய நிலையைப் பெற்றுவிட்டன.

எனவே தான், எந்த மொழியையும் படித்துப் புலமை பெறவும்; எவரிடம் வேண்டுமானாலும் குற்றேவல் செய்யவும்; எவரை வேண்டுமானாலும் தலைவராக, குருவாக, வழிகாட்டியாக, வழித்துணையாக ஏற்று அடிமை வாழ்வு வாழவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்த அவலக் கேவல நிலைகளை மாற்றிட வேண்டுமென்றால்; முதலில் கோயில் மணியோசை தமிழ்மொழி ஒலியாக ஒலிக்கவும்; கோயில் நகராக் களும் முரசுகளும் தமிழ்மொழி முழக்கமாக முழங்கவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். கோயில் சொத்துக்களைக் கண்காணிக்கக் கோயில் பிள்ளைகள்; கோயிலுக்குரிய படையல் பூசனைப் பொருட்கள் முதலியவைகளைக் கவனிக்கப் பண்டாரங்கள்; கோயில் பூசைகளில் தமிழ்ப்பாக்கள் பாடிடத் தேசிகர்கள், ஓதுவார்கள்; கோயில் படைப் பயிற்சி வழங்கும் படையாட்சிகள்; கோயில் மன்ற நீதி வழங்கும் அம்பலங்கள்; கோயில் உட்காவல் புரியும் அகம்படியர்கள், புறக்காவல் புரியும் மறவர்கள்; கோயில் ஆதுலர் சாலைகளை நிர்வகிக்கும் மருத்துவர்கள்; கோயில் பள்ளிகளை நிர்வகிக்கும் ஆசான் கள்; கோயில் திருவிழாக்களை நடத்தும் நாயகங்கள்; கோயில் மாடுகளைக் கவனிக்கும் கோனார்கள்; கோயில் செலவினங்களுக்கு முதலீடு கவனிக்கும் முதலிகள்; கோயில் ஆச்சாரங்களைக் கவனிக்கும் ஆச்சாரியார்கள்; கோயில்களில் அருட்கணிப்பு வழங்கும் மருளாளிகள்; கோயிலில் அருளை அநுபவப்பொருளாக் வழங்கும் அருளாளிகள்; கோயிலில் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதப்படி மானுடரை உய்விக்கும் அருள்நெறிகளைச் செயலாக்கும் கருவறை ஊழியர் களான குரு, குருக்கல், குருமார், பூசாறி எனும் கோயில் நால்வர்கள்; ஆறுகாலப் பூசைகளிலும் முறையாக இசைவழங்கும் பல்லியத்தார்கள், மேளகாரர்கள், இசை வேளாளர்கள்; கோயில் உரிமை பெறும் வேளிர்கள், வேளார்கள்... முதலிய நாற்பத்தெட்டு வகை நிலையினர் களும் தங்களுடைய பணிகளைத் **தூய வாய்மை நிறை தமிழ் மொழியில் பற்றோடும் பாசத்தோடும் நிகழ்த்திடல் வேண்டும்.** அதற்குரிய அரசாணைகள் பிறக்கா விட்டாலும்; நிலையாகத் தமிழினக் குருபீடம், தமிழ் மெய்ஞ்ஞானசபைத்தலைவர், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியாரின் அருளாணைகள் காலங்கள் தோறும் பிறந்திடுகின்றன. அந்த அருளாணைகளை நம் தமிழர்கள் சொந்த ஆணைகளாக நினைவில் கொண்டு செயல்படுத்த வேண்டும். அப்பொழுதுதான், 'கோயில் ஒழுங்கு' உருவாகிடும். அப்படிக் **கோயில் ஒழுங்கு உருவானால் தான் தமிழரின் வாழ்வியல் நிலைகள் அனைத்தும் ஒழுங்காகிடும்.**

திருமணமாகாத இளைஞர்கள், குடும்பப் பொறுப்புக் களிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், ஊருக்குப் புதியவர்கள், மதத்துறை சார்ந்த கலைஞர்கள் ... முதலியோர் உள்ளூர்க் கோயில்களில் இரவில் தங்கிடல் வேண்டும். இந்த நடைமுறை இடைக் காலத்தில் அன்னியர்களால் தடுக்கப்பட்டுவிட்டது. அன்னிய மொழியினரும், மொழியும், மதக் கருத்துக்களும் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்தின் செயலகங்களான கோயில்களைத் தங்களுடைய கூடாரமாக ஆக்கிக்கொண்டதால்தான்; இப்படிப்பட்ட மாபெரும் சீர்கேடு, முறைகேடு, தடை... முதலியவை ஏற்பட்டு விட்டன. எனவே, **ஒவ்வொரு கோயிலும் அந்தந்த வட்டார மக்கள் அன்றாட வாழ்வில் உலகியலாக வந்து போகக்கூடிய ஒரு பொதுமன்றமாக மாற்றப்பட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான், மெய்யான இந்துமதம் பொதுமக்களோடு மிகமிக நெருக்கமான, விருப்பமான, தொடர்புகளை உடைய ஒன்றாகிடும்.**

பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்களும்; 'இம்மண்ணுலகப் பயிரினங்களும், உயிரினங்களும் மேம்பாடடைவதற்காக' அருட்கொடையாக வழங்கியது தான்; அண்ட பேரண்டமாளும் மெய்யான இந்துமதம். இது, பதினெண் சித்தர்களுடைய சித்தர் நெறியெனும் 'சீவநெறி'யான 'மெய்யான இந்துமதமாகும்'; இந்த மெய்யான இந்துமதத்தில் தான்; 'குழந்தைகளுக்கும், பெண்களுக்கும், வயதானவர்களுக்கும் ஏற்படக்கூடிய அருவ, உருவ, அருவுருவ, உருவ அருவப் பாதிப்புகள்', 'நாள், கோள், மீன் இராசிநிலைப் பாதிப்புகள்', 'செவ்வாய்ப் பீடிப்பு', 'சனிப்பீடிப்பு', 'இராகுப் பீடிப்பு', 'மூலமீன் பீடிப்பு' ... முதலியவைகளுக்கெல்லாம் உடனுக்குடன் தடைக்கட்டிப் பரிகாரம் செய்து பாதிப்புக்களை அகற்றும் மருளாளிகள், சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் தோன்றிச் செயல்படும் அருட்பணி விரிவாக்கத் திட்டங்கள் இருக்கின்றன. இதன்படி, எந்த மனிதன் விருப்பத்துடன் குருவை நாடிக் குருவழி முயன்றாலும்சரி; அவன், அருளை அநுபவப் பொருளாகப் பெற்றுக் கடவுளாகவே மாறிட முடியும். இந்த மாபெரும் திட்டத்தின் எளிய செயல் நிலையாகத்தான் பதினெண் சித்தர்களுடைய பூசைமொழி, பூசைவிதி, பூசைநெறி, பூசைமுறை முதலியவற்றின் மூலம் மருளாளியாக, சித்தரடியானாக, சித்தரடியாளாக, சித்தரடியாராக மாறுபவர்களில் யாராவது ஒருவராவது ஒவ்வொரு கோயிலிலும் அமர்ந்து அவசியம் குழந்தை களுக்கும், பெண்களுக்கும், முதியோர்களுக்கும் மந்திரித்து அருள் வழங்கவேண்டும். அத்துடன், அருளுலகப்

பாதுகாப்புகளை நிலையாக வழங்கும் முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கம், சக்கரம், வில்லை... முதலிய அருளூறு பூசனைப்பொருள்களைத் தேவையானவர்கள் எல்லாம் எளிதாக எல்லாக் கோயில்களிலும் அன்ருடம் பெற்றுக் கொள்ளும் வண்ணம் அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல் வீரர்கள் செயல்படக்கூடிய அலுவலகமாக, யாகக் கூடமாக, தவப்பள்ளியாக, பத்திப்பாட்டையாக, சத்திச் சாலையாக, சித்திச் சோலையாக, முத்தி மன்றமாக ... எல்லாக் கோயில்களையும் தயாரித்திட வேண்டும். அப்பொழுதுதான், நம் தமிழர்களுக்கும், இவர்களுக்காகவே இருக்கும் இந்துமதத்திற்கும், மிகமிக விருப்பமான நெருக்கமான உறவும், பற்றும், பாசப் பிணைப்பும், நட்பும் உருவாகிடும்.

**வேற்று நாட்டாரின் மொழிகளும், மதங்களும், உலகியல் நாகரிகங்களும், ஆட்சிச் செல்வாக்குகளும்; நமது மெய்யான இந்துமதம் நம்முடைய குழந்தைகளுக்கும், பெண்களுக்கும், முதியோர்களுக்கும் வழங்கிடும் அருளுலகப் பாதுகாப்புச் செயல் திட்டங்களைப் பெருமளவில் பாதித்துவிட்டன. அதாவது, நமது இந்து மதத்தவர்களே உடுக்கை அடித்து அருளாற்றலை மனித உடலுக்கு வரவழைக்கும் பூசாறிகளையும்; ஓமம், ஒகம், யாகம், யக்ஞம், வேள்வி முதலிய ஐந்திறங்களையும் முறையாக நிகழ்த்தி வேண்டுபவர்களுக்கெல்லாம் அருளை அனுபவப் பொருளாக வழங்கிடவல்ல ஐந்திறத்தார்களையும்; முக்காலத்தையும் கணித்துக் கூறவல்ல மருளாளிகளையும்; அருளை மருந்தாகவும், விருந்தாகவும், பாதுகாப்புச் சாதனமாகவும் மக்களின் தேவைக்கேற்பத் திருநீறு, குங்குமம், முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கம், சக்கரம், வில்லை முதலியவைகளாக வழங்கவல்ல 48 வகை அருட்பட்டத்தவர்களையும்; பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும், உயிரற்ற பொருட்களுக்கும் அருளாற்றலை வழங்கிக் கடவுள்களாக்கிடும் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களையும்; . . . கேலியாகவும், போலியாகவும் கருதிச் செயல்படக்கூடிய அப்பாவித்தனமான அழிவுப் போக்குகள் வளர்ந்துவிட்டன.** இன்னும் சொல்லப்போனுல், நமது இந்துக்களே, நமது கோயில்களில் மந்திரிப்பவர்களையும், மந்திரித்து அருளூறு பூசனைப் பொருள் வழங்குபவர்களையும் தடுப்பவர்களாக, தடை செய்பவர்களாக மாறிவிட்டார்கள். **ஆனுல், நமது இந்துக்களே வேற்று மதத்தவர்களின் கோயில்களுக்கும், வேற்று மொழியினரின் பூசைகளுக்கும் சென்று மந்திரித்துக் கொள்ளுவதை விரும்பியேற்றுப்** போற்றிப் பேணிப் பயன்படுத்தி வருகிருர்கள். இதனுல், இதுவரை நமது இந்து மதத்தைக் காப்பாற்றி வரும் மந்திரிக்கும் கலைகளும், மந்தர மந்திர மந்திறங்களும், மந்திரக்

கலைஞர்களும் பெருமளவில் செயல்பட முடியாமல் போகிறது. ஆனால், இவர்கள்தான் உண்மையிலேயே பதினெண் சித்தர் பீடாதிபதிகளான ஞானாச்சாரியார்கள் தோன்றிச் செயல்படாத காலங்களில்; நமது மெய்யான இந்து மதத்தைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். எனவே, நமது இந்துமதம் உண்மையிலேயே மறுமலர்ச்சி பெற வேண்டுமென்றால்; நமது மெய்யான இந்துமதம் விழிச்சியும், எழிச்சியும் பெற்று வளவளர்ச்சி அடைய வேண்டுமென்றால்; நமது மெய்யான இந்துமதம் செழிச்சிமிக்க ஆட்சி மீட்சி பெற வேண்டுமென்றால்; நமது மெய்யான இந்து மதத்தில் காலப்போக்கில் புகுந்துவிட்ட பொய்மைகள், பொல்லாங்குகள், புளுகுகள், அறியாமைகள், புரியாமைகள், சுரண்டல் போக்குகள், சூழ்ச்சிகள், ஏமாற்றுக்கள், ஏற்றத்தாழ்வுகள், சாதி வெறிகள் ... முதலியன அனைத்தும் எளிய அணுகுமுறைகளால் முழுமையாக அகற்றப்படவேண்டுமென்றால்; மேலே குறிப்பிட்ட **நமது மந்தர மந்திர மந்திறங்களும், மந்திரிக்கும் கலைகளும், மந்திரிக்கும் கலைஞர்களும் நம்முடைய அனைத்து வகையான கோயில்களிலும் கட்டாயமாகத் தங்கிச்செயல்படக்கூடிய நல்ல சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டும். அதாவது, யார் எந்த நேரத்தில் நம்முடைய எந்த இந்துமதக் கோயிலுக்கு வந்தாலும்; அவர்களுக்கு உடனேயே மந்திரிக்கப்பட்டு அருளுலகப் பாதுகாப்புகள் கிடைக்கக் கூடிய முழுமையான அருட்பணி விரிவாக்கத்திட்டச் செயல் நிலை நாடுதழுவி உருவாக்கப்பட்டாகவேண்டும். அப்படியில்லாவிட்டால், நம்முடைய இந்துமதத்தில் எத்தனையெத்தனை நாயன்மார்களும், ஆழ்வார்களும், அடியார்களும், மௌனகுருக்களும் ... தோன்றிச் செயல்பட்டாலும்; அவர்களின் அரிய பெரிய போதனைகளும், சாதனைகளும் பயனின்றிக் கரையில்லாத காட்டாற்றின் வெள்ள நீராகவே விரைவில் மறைய நேரிடும்.** இப்பேருண்மையை உணர்ந்தாவது, நம் தமிழரின் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் மூலம் அன்றாட வாழ்வில் அருளை அநுபவப் பொருளாகப் பெற்றுத் தேவையான பாதுகாப்புக்களைச் செய்து கொள்ளும் பழக்கத்தை மீண்டும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நம்முடைய கோயில்கள்தான், நம்முடைய இனம், மொழி, மதம், நாடு, சமுதாயம், அரசியல் முதலியவைகள் அன்னியருக்கு அடிமைப்பட்டு விடாமல் பாதுகாத்திடும் அரண்களாக, அருட்படை தயாரிக்கும் பாடி வீடுகளாக, அருட்போர் நிகழ்த்தும் பாசறைகளாக விளங்குகின்றன. எனவே, நம்மவர்களின் அன்றாட உலகியல் வாழ்வில் உண்டாகக் கூடிய அனைத்து

வகையான பிறச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும், குழப்பங்களுக்கும், தயக்க மயக்கங்களுக்கும், முடக்கத் தேக்கங்களுக்கும் ... முடிவு காணக் கூடிய வழக்காடு மன்றமாக, நீதிவழங்கும் அம்பலமாக நமது கோயில்களைத்தான் பயன்படுத்தவேண்டும். அதுமட்டுமல்ல, அந்தந்த ஊர் கோயில்களோடு தொடர்பு கொண்டு தான்; ஊரில் நடைபெறக்கூடிய பிறப்பு, இறப்பு, திருமணம் .... முதலிய எல்லா நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டாக வேண்டும். அதாவது, கோயில்களில் உள்ள 48 வகையான ஊழியக்காரர்கள்தான் அந்தந்தக்கோயில் களின் வட்டாரங்களில் உள்ள பொதுமக்களின் அன்றாட வாழ்வியல் நிகழ்ச்சிகளில் நேரடிப்பங்கு கொண்டு வழிகாட்டுபவர்களாகவும், வழித்துணைவர் களாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான், பதினெண் சித்தர்களுடைய 'சித்தர் நெறி' எனும் 'சீவ நெறி' யான 'மெய்யான இந்துமதம்' ஒரு சமூக விஞ்ஞானம்தான் என்ற பேருண்மையும்; இந்த சமூக விஞ்ஞானம்தான், தனிமனித வாழ்வு, குடும்பவாழ்வு, சமயவாழ்வு, சமுதாயவாழ்வு, அரசியல் வாழ்வு எனும் ஐந்திணை வாழ்வுக்கும் அடிப்படையாக இருக்கின்றது என்ற பேருண்மையும் விளங்கிடும்; பயன்பட்டிடும்.

இப்படிப்பட்ட சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், விதி முறைகளும், நீதிநெறிகளும் ஒழுங்காகக் கோயில்களில் செயல்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தையும், செயல் திட்டங்களையும்தான்; இந்துமதத் தந்தையான அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் தம் காலத்தில் 'கோயில் ஒழுங்கு' என்ற 'ஞானவெட்டியான்' நூலை வழங்குகிறார்.

இந்த ஞான வெட்டியானைக் கொண்டுதான் பதினெண் சித்தர்கள்; தமிழர்கள் எனும் அருளுலக வித்துக்களையும், நாற்றுக்களையும் பயன்படுத்திச் செய்திடும் 'ஞானப்பயிர் விளைவிக்கும் பயிர்த்தொழிலில் தோன்றிடும் எல்லாவகையான களைகளையும் வேரோடு தோண்டி எடுத்துத் தூர எறிந்திடுகிறார்கள்'. இல்லா விட்டால், எவ்வளவுதான் உழைத்தாலும் பதினெண் சித்தர்களின் அருட்பயிர்த் தொழிலில் நல்ல விளைச்சலோ, கொழுத்த அறுவடைப்பயனோ கிடைக்காமல் போய்விடும். அதுதான், இப்பொழுது பெரும்பாலும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு தமிழனும் தங்கள் தங்கள் வட்டாரத்திலுள்ள கோயில்களையும், கோயில் சொத்துக்களையும், கோயிலின் நிறுவன நிருவாகக் கட்டமைப்புகளையும், கோயில் நடைமுறை களையும் தங்களுடைய உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் போற்றிப் பேணிப் பொது மக்களனைவரும் பயனடையும்படிச் செய்யவேண்டும்.

ஒவ்வொரு தமிழனும், நமது இந்துமத நால்வர்களான குரு, குருக்கல், குருமார், பூசாறி

என்பவர்களோடு அல்லது இந்நால்வரில் யாராவது ஒருவரோடாவது மிகமிக நெருக்கமான, விருப்பமான, மெய்யான தொடர்புகளை வளமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தொடர்பினால் ஒவ்வொரு தமிழனும் தங்களின் அருளுலகப் பயிற்சி முயற்சிகளின் மூலம் அருளாளராகிக் கொள்ள வேண்டும். அப்படித் **தமிழர்களில் அருளாளர்கள் கணக்கற்று தோன்றிட்டால் தான்;** தமிழின, மொழி, மத ... விடுதலை உணர்வு எப்பொழுதும் உயிர்த்துடிப்போடு இருந்திடும். அதுதான், **தமிழர்களை அருளுலகத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும் என்றென்றும் வாழ்ந்திடும் படிச் செய்திடும்.** அதற்காக இக்கோயில் ஒழுங்கு போன்று பதினெண் சித்தர்கள் படைத்துள்ள நமது மெய்யான இந்துமதத்திற்குரிய எல்லா நூல்களும்; எல்லாக் கோயில்களிலும் படிப்பதற்கும், விலைக்கு வாங்கிச் செல்வதற்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

ஓம் தென்னாடுடைய சீவனே போற்றி!
ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
ஓம் அரஅற நமப்பார்வதி பாதமே போற்றி!
ஓம் அரஅற மகாதேவப்பாதமே போற்றி!

# நிறைவுரை



11-வது பதினெண் சித்தர் பீடாதிபதி



12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி

**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம்**

குவலய குருபீடம். ஞானாச்சாரியார் அவர்கள், தமிழ் மொழியின் மெய்ஞ்ஞான சபைத் தலைவராக, தமிழரின் வாழ்வுக்குரிய குருவாக, ஆச்சாரியாராகச் செயல்பட்டு எழுதிய நூல்களும் தொகுத்தளித்த நூல்களும் ஏராளம்.

இவர் உருவாக்கிய சோழப் பேரரசு, தமது பொருளியலான ஆட்சிக்காக நாடு முழுதும் பரவலாகக் 'கொற்றம் வாழ் சாவடிகளை'த் (கொத்தவால் சாவடிகள்) தனியாக உருவாக்கிச் செயல்பட்டதைக் கண்டித்துப் பரிகாரமாக எழுதியதே இது. அதாவது, அருளாட்சிக்காக நாடு முழுதுமுள்ள கோயில்களையே 'கொற்றம் வாழ் சாவடிகளாக' ப் பயன்படுத்த வேண்டுமென்று அறிவுரை வழங்கினார் இவர். இவரது அறிவுரை

வாசகங்களில் ஒன்று, "...கோயில்களில்தான் அருளியலாட்சியும் பொருளியலாட்சியும் நிகழவேண்டும். அப்பொழுதுதான், கலை, கல்வி, மருத்துவம், வணிகம் முதலியவை அனைவருக்கும் பயன்படக்கூடிய தூய்மை நிலையையும், வாய்மை நிலையையும் பெற்றிட முடியும். அதற்காக, நமது கோயில்களில் ஆறுகாலப் பூசையின் போது வங்கியம், நெடுவங்கியம், கொம்பு, தாரை, தப்பட்டை, பறை, முரசு, நகரா, கொட்டுமேளம், உடுக்கை, உருமி, கிடுமுட்டி, தாளம், கஞ்சரா, பஞ்சமுகம் .. முதலிய எல்லா இசைக்கருவிகளும் இன்னிசையொலி எழுப்ப வேண்டும். பூசாறியின் பூசையும், ஓதுவோரின் அருட்பாடல் ஓதலும், தேசிகரின் அருளுரையும், குருமாரின் குருபாணியும், குருக்கலின் ஏடுபடித்தலும், குருவின் மந்திரித்து அருள் வழங்கலும் நிகழ வேண்டும்..."

... **குருபாரம்பரியம்**

## அருள் வழங்கல்

பதினெண் சித்தர்களின் முறைப்படி அருளை அநுபவப் பொருளாக்கி பாதிப்புள்ளவர்களுக்கு மருந்தாக வும் பாதிப்பற்றவர்களுக்கு விருந்தாகவும் வழங்கும் பணி செவ்வாய், வெள்ளி மாலை நேரங்களிலும் ஞாயிறு பகலிலும் நிகழுகின்றன. நாள், கோள் (கிரகப் பாதிப்புகளுக்கும்), மீன், இராசி பாதிப்புகளுக்கும் மற்ற மந்திரவாதிப் பாதிப்புகளுக்கும் நலம் வழங்கப்படு கிறது. வீடு, தொழிற்கூடம், கோயில் முதலியவை களுக்குத் தேவையான சக்கரங்கள், இயந்தர இயந்திர இயந்திறங்களும், எந்தர எந்திர எந்திறங்களும் வழங்கப்படுகின்றன.

தனிமனிதர் பூசை செய்ய கற்றுக் கொடுக்கப்படு கிறது. பிறருக்கு அருள் வழங்கி நலம் விளைவித்துப் பாதுகாப்பு வழங்கிட மந்திரிக்க கற்றுக்கொடுக்கப்படுகிறது.

இந்து வேத பாடசாலை நிகழ்த்தப்படுகிறது.

**ஞானாச்சாரியார்,**
**இந்து மதத் தந்தை,**
இந்து வேத நாயகம்,
இந்து வேத பீடம்,
குருமகா சன்னிதானம்,
இந்து மதத் தலைமை ஆச்சாரிய மடம்
காரனோடை, சென்னை-67.

## கடவுள்கள் பற்றி சில இந்துவேத வாசகங்கள்

கடவுள்களைப் பற்றிய நுட்பமான செய்திகளை திட்டவட்டமாக **'இந்து வேதம்தான்'** வரையறுத்துக் கூறுகிறது.

1. "கடவுள்களில் ஆண் நிலை, பெண் நிலை, இரண்டும் கலந்த அலி நிலை என்ற மூன்று வகைகள் உண்டு" என்று கூறும் ஒரே வேதம் இந்து வேதம்.
2. "முன்னோர்களை வழிபடுவதும், மூத்தோர்களைப் பணிந்து ஏற்றுப்போற்றி வாழ்வதும்தான் மத வாழ்வு" என்று கூறும் ஒரே வேதம் இந்து வேதம்.
3. "ஒரு குறிப்பிட்ட நாட்டுக்குரிய கடவுள் வேற்று நாட்டுக்கு செல்லாது; ஒரு குறிப்பிட்ட மொழிக்குரிய கடவுள்கள் வேற்று மொழிகளைத் தெரிந்திருக்க மாட்டார்கள்" என்று கூறும் ஒரே வேதம் இந்து வேதம்.
4. "கடவுளுக்கும் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று உண்டு" என்று கூறும் வேதம் இந்து வேதம்.
5. " எம்மதமும் சம்மதம் என்று கூறுவது செயலுக்கு வராத கற்பனையான, பொய்யான, மோசமான, ... கருத்து; அதே சமயத்தில் எல்லா மதங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்று கூறும் வேதம் இந்து வேதம்.

## பதினெண் சித்தர் திருச்சபை அறக்கட்டளையின் செயல் திட்டங்கள்

பதினெண்சித்தர்களின் இலக்கியங்களை அச்சிடல்; கலைகளைப்பயிற்றுவித்தல்; மருத்துவ முறைகளை ஆராய்தல்; அருளூறு பூசை முறைகளை, பூசை விதிகளை, பூசை மொழிகளைக் கற்றுக் கொடுத்தல்; தவம், குண்டலினி ஒக முறை, யோக முறை, ஒகாசனப் பயிற்சிமுறை, சேவலோன் போர்க்கலைகள் முதலியவைகளை மறுமலர்ச்சி அடையச் செய்தல்; சித்தர்களின் பாலகர்பள்ளி, இளம்பிள்ளை பள்ளி, வாலிபர் கல்விச்சாலை முதலியவைகளை நடத்துதல்; அனாதை இல்லம், முதியோர் காப்பகம், இலவச மருத்துவமனை முதலியவைகளை நடத்துதல்.

அரசாங்க ஒப்புதல் பெற்ற இந்நிறுவனத்திற்கு நன்கொடை வழங்குவோருக்கு வருமான வரிச்சலுகை (80 – G) 1961–ன் கீழ் வரி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக அறங்காவலர்,
**பதினெண் சித்தர் திருச்சபை**
13, குமாரசாமி தெரு, வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை – 53. தொலைபேசி : 654447

# தொடர்பு முகவரிகள்

1. இ.மு.க. பாரம்பரியத் தலைவர்,
அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார்,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை–53.
தொலைபேசி : 654447

2. இ.மு.க. அவைத்தலைவர், முதல் விசயாலய சோழன்,
ப.்றுளி கம்ப்யூட்டர்சு, 12, சல்லிவான் தெரு,
சாந்தோம், சென்னை–4. தொலைபேசி : 74359

3. பதினெண் சித்தர் மடம், பீடம், கருகுலம்,
G.N.T. சாலை, காரனோடை, சென்னை–600067.

4. இ.மு.க. பொதுச்செயலாளர்
கு. இரவிமணி B.Sc. B.Tech.
3, சிவாசிநகர், மேம்பாலம், தஞ்சாவூர் –1.

5. பெ.சுப்பையா, B.E., D.M/CRC.
25, பட்டமங்கலம் தெரு,
மயிலாடுதுறை – 609001.

6. இந்து வேதம் பரப்பும் நாயகம் த.கேசவன் B.Com.,
உரக்கடை, 266, கீழவெளிவீதி, மதுரை – 1.

7. ச.துரைராசன், B.Sc 115, புட்டுத்தோப்பு ரோடு,
மதுரை – 625010.

8. வெ. செகதீசன், B.Sc., 1, சிசுட்டர் ரோசு வீதி,
மேலப்பொன்னகரம், மதுரை – 625010.

9. சந்திரா நடராசன்,
9, A, முனியாடுவார் நாயனர் தெரு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627002.

10. மு. இராமானுசதாசு, பருப்பூரணி
கிழக்கு,கழனிவாசல், புதுரோடு,
காரைக்குடி – 623001.

11. இரா. கங்காதரக்குமார், 17, கவரைத் தெரு,
இராசீபுரம், சேலம் – 637504.

12. இரா.வெங்கடேசன் M.A. B.L.,
2/68, பிரதான சாலை, வேம்படிதாளம்,
சேலம் – 637504.

13. அ.அரங்கநாதன், 54, வீரபாண்டி ரோடு,
மல்லூர், சேலம் – 636203.

14. இரா. இராமசாமி, 6/447 திருவள்ளுவர் நகர்,
சிறுமுகை, கோவை – 641302.

15. த. மூர்த்தி, 5/2, S.L.S. நகர்,
சூலூர், கோவை – 641402.

16. சீ. உலகநாதன், 9, பாசியம் ரெட்டி 1வது தெரு
ஒட்டேரி, சென்னை – 12.

## அருளூறு காயந்திரி மந்தரம்

(சத்தி காயந்திரி மந்தரம்)

**"ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணாகுக!**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்**
**தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!"**

ஒவ்வொருவரும் அன்றாடம் தனித்துப் பூசைகளில் 108 முறை ஓதி அருளைப் பெறும் காயந்திரி மந்தரம்.



# இந்துமத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்** : 'இளமுறியா'க் கண்டம் (The Lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'

**காலம்** : பதினெண்சித்தர்களால் அனாதிக்காலத்தில் அதாவது கி.மு. 43, 71, 101 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி** : தமிழ் மொழி

**வழிபாட்டு நிலையம்** : 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்** : 108 பூசை மொழி நூல்கள்
48 பூசை விதி நூல்கள்
96 தத்துவ நூல்கள்
144 செயல் சித்தாந்த நூல்கள்
36 குருபீட நூல்கள் ஆக மொத்தம் 432 நூல்கள்

**இந்துமதப் பயன்கள்** : தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும், வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச்செய்தல்.

இந்துமதம் என்பது முன்னோர் வழிபாடு; மூத்தோர் வழி நடத்தல்

அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.

அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.

*** ஆதாரம்** : மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதி சிவனாரின் குருபாரம்பரியம்.